# தமிழ்மொழியும் இலக்கியமும்

**தரம் 10** **வாரம் 34**

**அலகு : குகப்படலம்**

**இவ்வாரத்துள் பெற்றுக்கொள்ளக் கூடிய கற்றற்பேறுகள் :**

- பாடல்களைச் சந்தி பிரித்து, கொண்டுகூட்டி வாசிப்பார்.
- பாடல்களின் பொருளைத் தமது சொந்த மொழி நடையில் எழுதுவார்.
- பாடல்களில் இடம்பெறும் அணிகள் பற்றி விளக்கி எழுதுவார்.
- அரும்பதங்களின் பொருளை அறிந்து கூறுவார்.
- பாடல்களில் நயந்தவற்றை எழுதுவார்.

**மாணவர் செய்ய வேண்டிய செயற்பாடுகள் :**

I. தமிழ் இலக்கியத் தொகுப்புப் பாடநூலின் பக்கம் 41 இலுள்ள பாடல் 3 இனைச் சந்தி பிரித்து வாசிக்கவும்.

II. பின்வரும் அரும்பதங்களுக்கான பொருள்களை அறிந்து கொள்க.

* அடியின் மிசை – அடியின் மேல் * நெடிது – நீண்ட நேரம் * கார – காராம்பசு
* இன்துணைவன் – இனிய துணைவன் * இராகவன் – இராமன் * திரு – அழகிய
* குரிசில் – ஆண் மகன்

III. பாடப்புத்தகத்தைத் துணையாகக் கொண்டு பாடல் 3 இன் பொருளை அறிந்து கொள்க.

IV. பாடல் 3 இல் பயன்படுத்தப்பட்டுள்ள அணிகளை இனங்கண்டு விளக்கமாக எழுதுவதற்கு முயல வேண்டும். (அதற்கு பின்வரும் விளக்கங்களை கவனிக்க.)

- உவமை அணி
  - உவமானம் : கன்றைப் பிரிந்த காராம் பசு
  - உவமேயம் : இராமனைப் பிரிந்த கோசலை
  - பொதுத் தன்மை : பிரிவுத்துயர்
- குன்று அனைய திரு நெடுந் தோள் குகன்
  - உவமானம் : குன்று
  - உவமேயம் : குகனின் திரு நெடும் தோள்
  - பொதுத் தன்மை : வலிமை

V. தமிழ் இலக்கியத் தொகுப்புப் பாடநூலின் பக்கம் 41 இலுள்ள பாடல் 4 இனையும் மேற்படிச் செயற்பாடுகள் மூலம் கற்க.

- அரும்பதங்கள்

* மெய்வீரர் – உண்மையான வீரர் * விலங்கல் – மலை * திண் – வலிமை
* காளை – ஆண்மகன் * அகல் இடம் – அகன்ற பூமி

- அணிகள்

  விலங்கல் திண்தோள் (உவமை அணி)
  - உவமானம் : விலங்கல்
  - உவமேயம் : திண்தோள்
  - பொதுத் தன்மை : வலிமை

  கைவீரக் களிறு அனைய காளை (உவமை அணி)
  - உவமானம் : களிறு (ஆண் யானை)
  - உவமேயம் : காளை (குகன்)
  - உவமை உருபு : அனைய
  - பொதுத் தன்மை : மிகுந்த வீரம்

VII. மேலதிக விளக்கங்களுக்காக கீழே தரப்புட்டுள்ள இணையத்தள இணைப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளவும்.

VIII. இச்செயலட்டையின் இறுதியில் வழங்கப்பட்டுள்ள கணிப்பீட்டு வினாக்களுக்கு விடையளிக்க.

IX. அனைத்து வினாக்களுக்குமான விடைகளை உங்கள் பாட ஆசிரியரிடம் வழங்கி சரிபார்த்துக் கொள்க.

**மேற்படி செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தக்கூடிய புத்தகங்கள், Website, LMS பாடம் கற்றல் உபகரணங்கள் :**

**Youtube : https://www.youtube.com/watch?v=KNIl956lhxw&t=21s**

**கணிப்பீடு :**

1. **பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்க.**
   1. "விலங்கல் திண் தோள்" - இதில் விலங்கல் என்பது,
      1. மலை 2. மழை 3. விலங்கு 4. கடல்
   2. "அறம் தானே என்கின்ற அயல் நின்றான்…" - இங்கு அறம் என்பது,
      1. மறம் 2. தர்மம் 3. பாம்பு 4. சத்தியம்
   3. "குன்று அனைய திரு நெடுந்தோள்" - குன்று என்பதன் எதிர்ப்பதம்,
      1. மலை 2. மேகம் 3. குழி 4. மழை

2. **பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான முறையில் விடை எழுதுக.**
   1. குகனின் குணப்பண்புகள் இரண்டினைத் தருக.
   2. இராமன் காடு வந்ததால் கிடைத்த நன்மை யாது?
   3. சுமித்திரையின் குணவியல்புகள் இரண்டினைத் தருக.

3. **பின்வரும் கட்டமைப்பு வினாக்களுக்கு விடையளிக்க.**
   1. பரதன் கோசலைக்கு குகனை அறிமுகஞ் செய்து வைக்கும் முறையை விளக்குக.
   2. கோசலை, இராமன் மீது கொண்டிருந்த அன்பை கம்பர் எவ்வாறு வெளிப்படுத்துகின்றார்?